Australian Government
Department of Home Affairs

# COVID-19 பரிசோதனையும் சிகிச்சையும்

உங்களிடம் விசா இல்லாமலோ விசாவின் தற்போதைய நிலைமை பற்றி அறிந்திராமலோ இருந்தால் கூட பொது சுகாதார வழிகாட்டல்களை கடைபிடித்தல் மிக முக்கியமாகும். நீங்கள் சுகயீனமுற்று இருந்தாலோ, வைத்திய சிகிச்சை தேவைப்பட்டாலோ அதே சமயத்தில் COVID-19 க்கான பரிசோதனையையும் செய்யுங்கள்.

மத்திய அரசும் உள்ளூராட்சி நிறுவனங்களும் COVID-19 க்கான பரிசோதனையையும் சிகிச்சையையும் இலவசமாக வழங்குகின்றன.

- அவுஸ்திரேலிய தலைநகர எல்லை
- நியூ சவுத் வேல்ஸ்
- வட பிராந்தியம்
- குயின்ஸ்லாந்து
- தென் அவுஸ்திரேலியா
- தஸ்மானியா
- விக்டோரியா
- மேல் அவுஸ்திரேலியா

### விக்டோரியாவின் குடிவரவு வைத்திய பரிசோதனை

COVID-19 கட்டுப்பாடுகள் மேலும் அதிகரிக்கபட்டதால், விக்டோரியாவில் அனைத்து குடிவரவு வைத்திய பரிசோதனைகளும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் வெளியிடப்படும் பொது சுகாதார அறிவித்தல்களுடன் இவை மேலும் மீளாய்வுச் செய்யப்படும்.

# என்னிடம் பிரிட்ஜிங் விசா ஒன்று உள்ளது

## என்னிடம் பிரிட்ஜிங் A, B மற்றும் C விசா உள்ளது

நீங்கள் தற்சமயம் பிரிட்ஜிங் விசா A, B அல்லது C வைத்திருந்தால், உங்களிடம் இருக்கும் விசா விண்ணப்பம் அல்லது மதிப்பாய்வு ஆராயப்படும்போது அவுஸ்திரேலியாவில் தங்க உங்களை இது அனுமதிக்கும். இருப்பினும், உங்களின் வதிவு பற்றிய முடிவுகள் அல்லது மதிப்புரைகள் நிலுவையில் இல்லாமலோ உங்களால் அவுஸ்திரேலியாவை விட்டு வெளியேற முடியாமலோ இருந்தால், உங்களை சட்டப்பூர்வமாக தங்க வைத்திருக்க புதிய விசாவிற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

நீங்கள் பிரிட்ஜிங் விசா A அல்லது C வைத்திருப்பவராக நீங்கள் அவுஸ்திரேலியாவை விட்டு வெளியேறினால், உங்கள் பிரிட்ஜிங் விசா A அல்லது C இடைநிறுத்தப்படும். எதிர்காலத்தில் நீங்கள் அவுஸ்திரேலியாவுக்குத் திரும்ப விரும்பினால், உங்களை இந்நாடு அனுமதிக்க இன்னுமொரு விசாவிற்கு விண்ணப்பிக்க வேண்டும். பிரிட்ஜிங் விசா A ஒன்றை வைத்திருப்பவர்கள் அவுஸ்திரேலியாவை விட்டு வெளியேறுவதற்கு முன்பு பிரிட்ஜிங் விசா B க்கு விண்ணப்பிக்க முன்வரலாம்.

- பிரிட்ஜிங் விசா B பயன்பாடுகள் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளன. இருப்பினும், சலுகைகள் கிடைக்கும் பட்சத்தில், பிரிட்ஜிங் விசா B வைத்திருப்பவர்களுக்கு பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்படும் வரை அவுஸ்திரேலியாவுக்குள் அனுமதி மறுக்கப்படும். பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் சலுகைகள் பற்றிய மேலதிக தகவலுக்கு, அவுஸ்திரேலியாவுக்குள் வருகை ஐப் பார்க்கவும்.

## என்னிடம் பிரிட்ஜிங் விசா E உள்ளது

பிரிட்ஜிங் விசா E உங்களை அவுஸ்திரேலியாவில் தங்க அனுமதிக்கும் என்பதுடன் நீங்கள் இவற்றை செய்யவும்:

- வெளியேற ஏற்பாடுகள் செய்யுங்கள்
- குடிவரவு முடிவுக்காக காத்திருங்கள்.

உங்கள் வதிவு சட்டவிரோதமாகிவிட்டாலும் பிற விசாக்களுக்கு விண்ணப்பிக்க முடியாவிட்டாலும், விரைவில் பிரிட்ஜிங் விசா E க்கு விண்ணப்பிப்பது, உங்களுக்கு அவுஸ்திரேலியாவுக்குள் சட்டபூர்வமான அந்தஸ்தை வழங்கும். ஆகவே நீங்கள் விரைவில் புறப்படுவதற்கான ஏற்பாடுகளை செய்யலாம்.

நீங்கள் ஒரு பிரிட்ஜிங் விசா E வைத்திருந்தாலும், அது காலாவதியாவதற்கு முன்பு அவுஸ்திரேலியாவை விட்டு வெளியேற முடியாவிட்டால், சட்டப்பூர்வமாக நாட்டுக்குள் தங்கி இருக்க நீங்கள் மற்றுமொரு பிரிட்ஜிங் விசா E க்கு விண்ணப்பிக்க வேண்டும்.

- இணையம் வாயிலாக நீங்கள் ImmiAccount மூலம் விண்ணப்பிக்கலாம்
- உங்களிடம் ImmiAccount க்கு பிரவேசம் இல்லையென்றால், நீங்கள் ஒரு மென் படிவத்தை மின்னஞ்சல் செய்யலாம் அல்லது இடுகையிடலாம் (படிவம் 1008 - பிரிட்ஜிங் E விசாவிற்கான விண்ணப்பம் - துணைப்பிரிவு 050)

சட்டத்துக்கு கட்டுப்படாத அதேவேளை நாட்டின் குடிமக்கள் அல்லாதவர்கள் அல்லது பிரிட்ஜிங் விசா D, E அல்லது F வைத்திருப்பவர்கள்

அவுஸ்திரேலியாவை விட்டி வெளியேறினால் மீண்டும் அவுஸ்திரேலியாவுக்குள் வருவருதற்கான அனுமதிகள் வழங்குவது குறித்து கருத்திற்கொள்ளப்பட மாட்டார்கள். அதேவேளை அவர்களின் எதிர்கால விசா நடவடிக்கைகளையும் அது பாதிக்கு:

- மறு நுழைவு தடைகள் குறித்த கூடுதல் தகவல்கள் இங்கே கிடைக்கின்றன: மறு நுழைவு தடைகள்

## பிரிட்ஜிங் விசாவில் தொழில் புரிதல்

உங்கள் பிரிட்ஜிங் விசா நிலைமைகளைப் பொறுத்து அவுஸ்திரேலியாவில் வேலை செய்ய உங்களை அனுமதிக்கலாம். நீங்கள் இதைச் சரிபார்க்கலாம்:

- VEVO சேவையைப் பயன்படுத்துதல், அல்லது
- உங்கள் ImmiAccount மூலம் உங்கள் விசா நிலைமைகளை அணுகுதல்.

உங்கள் பிரிட்ஜிங் விசா உங்களை வேலை செய்ய அனுமதிக்காவிட்டாலோ வேலை செய்வதற்கு கட்டுப்பாடுகள் விதித்தாலோ, வேலை செய்ய அனுமதிக்கும் மற்றொரு பிரிட்ஜிங் விசாவிற்கு உங்களால் விண்ணப்பிக்க முடியும். இது சில சூழ்நிலைகளில் மட்டுமே கிடைக்கிறது, அதற்காக நீங்கள் வழக்கமாக நிதி நெருக்கடியில் இருப்பதை நிரூபிக்க வேண்டும்.

தொழிலுக்கான தேவைகளை நீங்கள் பூர்த்தி செய்யாதிருந்த போதும் நீங்கள் இன்னும் பிரிட்ஜிங் விசாவிற்கு தகுதியுடையவராக இருந்தால், உங்கள் முந்தைய பிரிட்ஜிங் விசாவில் இருந்த அதே நிபந்தனைகளுடன் புதிய பிரிட்ஜிங் விசாவை நாங்கள் உங்களுக்கு வழங்குவோம்.

## காலாவதியாகும் பிரிட்ஜிங் விசாக்கள்

உங்கள் விசா காலாவதியாகிவிட்டால், அதேவேளை உங்களுக்கு குடும்ப ஆதரவு இல்லை என்றால், உங்களால் முடியுமாயின், விரைவில் உங்களுக்கு சொந்த நாடு திரும்புவது குறித்து பரிசீலிக்க வேண்டும்.

அடுத்த ஆறு மாதங்களுக்கு தமது தேவைகளை பூர்த்திச் செய்துக்கொள்ள முடியாத தற்காலிக விசா உரித்தாளர்கள் தமது தாய்நாட்டுக்கு திரும்ப, விரைவில் ஏற்பாடுகளை செய்ய வலியுறுத்தப்படுகிறார்கள்.

உங்களால் அவுஸ்திரேலியாவை விட்டு வெளியேற முடியாவிட்டால், உங்களிடம் செல்லுபடியாகும் விசாவொன்று இருத்தல் வேண்டும். பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்படும் போது நீங்கள் அவுஸ்திரேலியாவிலிருந்து புறப்படுவீர்கள் என்று எதிர்பார்க்கப்படுவீர்கள்.

மேலதிக தகவல்களை பார்க்க: உங்கள் விசா காலாவதியாகிறது அல்லது காலாவதியாகிவிட்டது

நீங்கள் அவுஸ்திரேலியாவுக்கு வெளியே இருந்தால், உங்கள் விசாவின் செல்லுபடியாகும் காலத்துக்குள் நுழைய முடியாவிட்டால், நீங்கள் விசாவுக்காக விண்ணப்பிக்க வேண்டிய அதேவேளை நீங்கள் அவுஸ்திரேலியா செல்ல விரும்பினால் புதியதொரு விசா வழங்கப்படும்.

விசா செல்லுபடியாகும் காலத்தை நீடிக்க முடியாது. நீங்கள் அவுஸ்திரேலியாவுக்கு வெளியே இருக்கும்போது பிரிட்ஜிங் விசா B (BVB) க்கு விண்ணப்பம் செய்யவோ அல்லது அவுஸ்திரேலியாவுக்கு வெளியே இருக்கும்போது BVB வழங்கவோ முடியாது.

## ஆதரவு சேவைகள்

உங்கள் விசா சிக்கலை உங்களால் தீர்க்க முடியாவிட்டால், உண்ணாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் நிலைமைகள் தீர்மான சேவையின் (SRS) உதவியை நாடலாம்.

மேலதிக தகவல்கள் இங்கு காணப்படும்: நிலைமைகள் தீர்மான சேவை

உங்கள் விசா தெரிவுகளை SRS அதிகாரிகள் விளக்கக்கூடியதுடன், இப்போது நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்கள் விருப்பங்களை பின்னர் எவ்வாறு தாக்கங்கள் செலுத்தும் என்பதையும் அவர்களால் கூற முடியும். அவுஸ்திரேலியாவிலிருந்து நீங்கள் புறப்படுவதைத் திட்டமிடவும், தேவையான பிற சேவைளைப் பற்றிக் காட்டவும் அவை உங்களுக்கு உதவக்கூடும்.

சலுகைகள் விதிக்கப்பட்ட சூழ்நிலைகளில், அவுஸ்திரேலியாவிலிருந்து வெளியேற விரும்பும் தகுதியுள்ள நபர்களுக்கு திணைக்களத்தின் நிலைமைகள் தீர்மான சேவை உதவும். திணைக்களம் அதன் வருவாய் உதவித் திட்டத்தை எளிதாக்குவதற்காக சர்வதேச குடிவரவு அமைப்பு (IOM) மற்றும் சேர்க்கோ (Homeward) ஆகியவற்றை சேவை வழங்குனர்களாக ஒப்பந்தம் செய்கிறது.

வருகையின் போதான உதவி தகுதிவாய்ந்தோர்களுக்கு ஒன்று வீதம், அல்லது இணைந்த உதவிகளையும் வழங்கலாம். அதற்கு இவையும் இணைத்துக்கொள்ளப்படும்:

- சுயாதீனமாக நாடு திரும்பியோருக்கான ஆலோசனை
- விமான பயணச் சீட்டு
- பயண ஆவணங்களைப் பெறுவதற்கான உதவி
- நாடு திரும்பும் போது நாட்டில் வரவேற்பு உதவி
- பயணத்தின் இறுதி இலக்குக்கான பயண உதவி.

நாடு திரும்புதல் உதவிக்கு தகுதியானவராக கருத, நீங்கள் கண்டிப்பாக:

- குடிமகன் அல்லாதவராக இருத்தல்
- அவுஸ்திரேலியாவுக்கு மீண்டும் நுழைய அனுமதிக்கும் விசாவை வைத்திருக்காமை
- நீங்கள் அடைந்து வசிப்பதற்கான உரிமை உள்ள ஒரு நாட்டையோ உங்கள் தாய் நாட்டையோ தானாக முன்வந்து தேர்ந்தெடுக்கவும்
- உங்கள் சொந்தப் பணத்தால் நாடு திரும்ப இயலாது என்பதை விளக்குங்கள்.

மேலதிக தகவல்கள் இங்கு காணப்படும்: வெளியேற உதவி

அவுஸ்திரேலிய சமூகத்தில் உள்ள குடிமக்கள் அல்லாதோரில் குறிப்பிட்ட சிலருக்கு தற்காலிகமாக அவர்களின் குடியேற்ற நிலைமை தீர்மானிப்பதற்காக, நிலைமை தீர்மான ஆதரவு சேவைகள் (SRSS) ஆதரவை வழங்குகிறது. தங்களின் குடியேற்ற நிலைமையைத் தீர்ப்பதற்காக உண்ணாட்டு அலுவல்கள் திணைக்களத்துடன் தொடர்புக்கொள்ளும் தங்களை தாமாகவே போசித்துக்கொள்ள முடியாத தனிநபர்களுக்கு குறுகிய காலத்துக்கென வடிவமைக்கப்பட்ட ஆதரவை SRSS திட்டம் வழங்குகிறது. இது தற்போதுள்ள நலன்புரி தகைமைகளிலி ஒன்றல்ல.

தொழில் புரியும் உரிமைகள் கொண்ட பிரிட்ஜிங் விசாவைக் கொண்டவர்களும் வேலை செய்யும் தகைமை கொண்டவர்களும் அவர்களின் குடிவரவு பதிவு சிக்கல்கள் தீர்க்கப்படும் போது தங்களைப் போசித்துக் கொள்ளவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

COVID-19 காலகட்டத்தில், SRSS இன் அடிப்படையில் ஆதரவுக் கோரும் விண்ணப்பங்கள் ஒவ்வொன்றாக மதிப்பிடப்படும்.

மேலதிக தகவல்கள் இங்கு காணப்படும்: நிலைமை தீர்மான ஆதரவு சேவைகள்